
THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே**
**சகல ஞானத்தோடும் பரிபூரணமாக**
**வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16




**மார்ச் 2009**


மரம் 9
கனி 4

ஆசிரியர்
B. அர்ஜுனன்


## இயேசுகிறிஸ்து – Jesus Christ




- தேவனுடைய நேசகுமாரன் – மத்.3:17
- தேவ ஆட்டுக்குட்டி – யோவா.1:36
- ஆதியிலே தேவனோடிருந்தவர் – யோவா.1:2
- அல்பா, ஒமெகா – வெளி.1:8
- பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் – வெளி.22:16
- இஸ்ரவேலின் ராஜா – யோவா.1:49
- மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவர் – வெளி.1:18
- மெய்யான திராட்சச் செடி – யோவா.15:1
- ஜீவ அப்பம் – யோவா.6:48
- தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் – மத்.1:21



### கிறிஸ்துவின் வசனம் *வழங்கும்* *தொலைக்காட்சி நிகழ்ச்சி*



தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் *TV* யில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் *TV* யில் வியாழன் காலை 6.15 - 6.30



### *ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை *SW* 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை

**கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்**



"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 மார்ச் - 2009 கனி - 4


ஆசிரியருரை

# தேவ மனிதன்

## The Man of God



**தே**வனுடைய மனுஷன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டுமென வேதாகமம் போதிக்கிறது? இந்த உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளும் தேவனால் படைக்கப்பட்டவைகளே. குறிப்பாக மனிதன் தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டான். ஆனால் மனிதன் நாளடைவில் தேவ சாயலை இழந்தான். மீண்டும் தேவசாயலைப் பெற்றுக்கொள்ளும் மனிதனே தேவ மனிதன். அவன் எப்படிப்பட்டவனாயிருக்க வேண்டும் என்பதுவே இச்செய்தியின் நோக்கமாகும்.

பரிசுத்த வேதாகமம் இப்படியாக போதிக்கிறது; "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர்2:5). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனால் இப்பூமிக்கு அனுப்பப்பட்டவர். அவர் மனிதனுடைய பாவத்தை போக்க மனுஷகுமாரனாக வந்தார். அவருடைய சிந்தை தேவனுடைய சித்தம் செய்வதே. அவர் சொல்லும்போது; "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்" என்றார் (யோவான்7:16,17). அவருடைய உபதேசம், அவருடைய செயல்பாடுகள் எல்லாமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதாகவும் தேவ மனுஷனுக்கு மாதிரியாகவும் இருந்தது. மேலும் சொல்லப்போனால் அது அவருடைய போஜனமாகவும் இருந்தது. "அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" என அப்போஸ்தலர்10:38-ல் வாசிக்கிறோம். இன்று இருக்கிற தேவனுடைய மனுஷன் அவரைப்போல நன்மைசெய்யவும், பிசாசினால் பிடிபட்டுள்ள ஜனங்களை காப்பாற்றுகிறவனாகவும்

இருக்கவேண்டும். இதுவே கிறிஸ்துஇயேசுவிலிருந்த சிந்தையாகும். அவர் உலகமெங்கும் சென்று இடம் வாங்கவும், பல கல்லூரிகளைக் கட்டவும், உலகராஜ்யங்களை ஏற்படுத்தவும் இங்கு வரவில்லை பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தம் செய்கிறவராக எங்கும் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு இருக்கும் ஒவ்வொரு தேவனுடைய மனுஷனுக்குள்ளும் இப்படிப்பட்ட சிந்தை காணப்படுகிறதா?

அப்படியானால் தேவனுடைய மனுஷன் கல்லூரிகளை நிறுவக்கூடாதா? இடங்களை வாங்கக்கூடாதா? என்று நீங்கள் நினைக்கலாம். ஒவ்வொருவருக்கும் தேவன் தனித்தனியே பல விதமான தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அவரவர் தாம் பெற்றுக்கொண்ட தாலந்துகளை பயன்படுத்தவேண்டும். கல்லூரி பக்கம் தன் கவனத்தை செலுத்தும் நபர் ஆண்டவர் நன்மை செய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார் என்ற வசனத்தை மறக்காதவராயிருக்கவேண்டும். தொண்டு நிறுவனத்திலிருந்து வருகிறவர்களுக்கு ஏதோ ஒரு காணிக்கையை கொடுத்து விட்டு என்னுடைய கடமை தீர்ந்துவிட்டது என்று எண்ணுவாரேயானால் அல்லது வருடத்திற்கு ஒருமுறை இல்லாதவர்களுடைய தேவையை சந்திப்பாரேயானால் அவர் தேவனுடைய சித்தத்தை முழுமையாக செய்கிறவர் என்று பொருள்படாது. தன்னுடைய அநுதின ஜீவியத்தில் பார்க்கிறவர்களுக்கு முன்பாக தன்னை ஒழிக்காது இயேசுவைப்போல நன்மைசெய்யக்கூடிய சிந்தை இருக்கவேண்டும்.

தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லாம் நல்லவைகளாகவே இருக்கிறது. "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று" (ஆதி.1:31). தேவனுடைய சிருஷ்டிப்பில் மோசமானவைகள் ஒன்றுமில்லை ஏனெனில் எல்லாம் நல்லது என்று தேவன் கண்டார். எல்லா கழிவுகளும் கலக்கும் கடல் நீரில் இருந்துதான் சுவை மிக்க உப்பு கிடைக்கிறது. அந்த உப்பை ஒருவரும் வேண்டாம் என்று விலக்குவதில்லையே. அன்பானவர்களே, தம்மிடத்தில் வருவோரை ஆண்டவர் இயேசு புறம்பாக்கவில்லை. நாம் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களானால் தேவனுடைய ஜனங்களை நேசித்து. அவர்களுடைய குறைகளில் அவர்களை விசாரித்து. நலமான காரியங்களை செய்யமுன்வரவேண்டும்.

தேவனுடைய மனுஷன் பொய்யைத் தவிர்க்கவேண்டும். பொய் பேசுவது இன்றைய காலகட்டத்தில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது பொய் சொன்னால்தான் வாழமுடியும் என்ற அளவுக்கு வந்து விட்டார்கள். ஒரு தேவனுடைய மனுஷன் மற்றமனிதர்களைப்போல பொய் சொல்லும்போது அது எவ்வளவு பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப்பார்ப்போம். பெத்தேலுக்கு தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியைக் குறித்து 1இரா.13-ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். அவனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால், நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும்,

போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் சொல்லியிருந்தார். அவனோ கிழவனான தீர்க்கதரிசியின் பொய்யை நம்பி மாண்டுபோனான். இந்த கிழவனான தீர்க்கதரிசி அப்படி என்ன சொன்னான் என்று நீங்கள் கேட்கலாம். பெத்தேலுக்கு வந்த தீர்க்கதரிசியை நோக்கி: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான், அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான். இவன் அந்த பொய்யை நம்பியிருக்கக்கூடாது. ஏனெனில் தேவன் ஒரு முறை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் முறை பார்த்து திருத்துகிறவரல்லவே என்று வாசிக்கிறோம். இதை அறிந்திருந்தும் பெத்தேலுக்கு வந்த தீர்க்கதரிசி இந்த கிழவனான தீர்க்கதரிசியின் வார்த்தையை நம்பிச் சென்று, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் செய்தான். இது ஒரு சாதாரண விஷயமாக நீங்கள் எடுத்துக்கொள்ளலாம் ஆனால் தேவனுடைய பார்வையில் அது மிகப்பெரிய குற்றமாக இருக்கிறது. உடனே கர்த்தருடைய வார்த்தை கிழவனான தீர்க்கதரிசிக்கு உண்டாயிற்று. அவன் அவனை நோக்கி: கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையில் சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அந்தப்படியே அந்த தீர்க்கனை வழியிலே ஒரு சிங்கம் எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது.

பொய் சொன்னபடியால் வந்த விபரீதத்தைப் பார்த்தீர்களா! ஒரு சின்ன பொய்தானே அதனால் என்ன? என்று மெத்தனமாக இருந்துவிடாதீர்கள். அது உங்களையும் பாதிக்கும் கேட்கிற மற்றவர்களையும் பாதிக்கும். ஏனெனில் "பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று வெளிப்படுத்தல்21:8-ல் வாசிக்கிறோம். ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன சொல்லப்பட்டுள்ள கர்த்தருடைய வார்த்தையை அல்லாமல் வேறொரு வார்த்தையை ஒருவன் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளாதிருங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாக எழுதுகிறார் "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்றார் (கலாத்தியர்1:8). கர்த்தருடைய வார்த்தையை போதிக்கிற எந்த ஒரு மனிதனும் அதனோடே ஒன்றை கூட்டவோ குறைக்கவோ கூடாது. தேவன் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி இப்படிச் செய்கிறார். ஆகையால் பேதுரு குறிப்பிடும்போது ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்று சொல்லுகிறார். ஆகையால் கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கவும், போதிக்கவும் முற்படுங்கள். அதையும் மீறி செய்வோமானால் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய வசனத்தை

ஆண்டவர் நமக்கு இங்கே நினைப்பூட்டுகிறார். “உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்” என்றார் (மத்தேயு5:37).

தேவனுடைய மனுஷன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கவேண்டும். மனிதர்கள் தேவனுடைய வசனங்களுக்கு செவிகொடுக்க தவறிவிடுகின்றனர். ஆதிமுதலாகவே இப்படியாக நடந்துவருகிறது. ஆனால் பரிசுத்த வேதம் சொல்லுகிறது; “தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாதிருக்கிறீர்கள்” (யோவான்8:47). நீங்கள் எப்படிப்பட்டவராய் இருக்கிறீர்கள்? தேவனால் உண்டானவர்களாயிருப்பீர்கள் என்றால் சாமுவேல் சொல்வதைக்கேளுங்கள்; “கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்” (1சாமு.15:22). இன்று காணிக்கை கொடுத்துவிட்டால் கடமை தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள். இவைகளை தேவன் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் செலுத்தும் காணிக்கை மற்றும் நீங்கள் நேர்ந்து கொண்ட பொருட்கள் எம்மாத்திரம். வானமும் பூமியும் அவருடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது. அவருக்காக நாம் என்னத்தை செலுத்தமுடியும். சாமுவேல் சொல்வதை கவனியுங்கள்: பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். கீழ்ப்படிதலையும், செவிகொடுத்தலையும் தேவன் விரும்புகிறார். ஆனால் மனிதனுடைய நினைவு என்னவாக இருக்கிறது? இந்த இரண்டைத்தவிர மற்ற காரியங்களைச் சொல்லுங்கள் செய்வோம் என்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுக்கு ஆலோசனைக்காரர்களாக இருக்க விரும்பக்கூடியவர்கள். தேவனுடைய மனுஷன் தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிவான். சாமுவேல் இளம்பிராயத்திலே தேவனுடைய சத்தம் கேட்டு, சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான் இந்த விதமான கீழ்ப்படிதலை தேவன் ஒவ்வொரு தேவனுடைய மனுஷனிடத்திலும் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவர் இயேசு இரண்டு மனுஷர்களைப் பற்றி லூக்கா6:47-49 வசனங்களில் குறிப்பிடுகிறார். “என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வாத்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே

அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். அநேகர் ஆண்டவரிடத்தில் வருகிறார்கள் ஆனால் அவருடைய ஆலோசனைப்படி குடும்பத்தை நடத்த தவறிவிடுகின்றனர். தேவசமுகத்துக்கு வந்தால் மட்டும்போதாது அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்யவேண்டும். தேவனுடைய மனுஷன் நாள் பார்க்கவும், நட்சத்திரம் பார்க்கவும், ஜோசியரையும், கைரேகை பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் நாடுவானேயானால் அவன் கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கிறவன் அல்ல. அவன் மண்ணின்மேல் வீடுகட்டின மனுஷனுக்கு ஒப்பானவன். அவனுடைய கட்டிடம் ஒரு நாளில் அழிந்துபோகும். அவனுடைய ஜீவியமும் அப்படித்தான். ஆகையால் அன்பானவர்களே தேவனுடைய வசனத்துக்கு செவிகொடுங்கள். அவைகளின்படி வாழ்க்கையை துவக்குங்கள். ஆலோசனைக் கர்த்தர் அற்புதமான ஆலோசனைகளைக் கொடுத்து உங்களை அற்புதவிதமாக வழிநடத்துவார்.

தேவனுடைய மனுஷன் பாவம் செய்யமாட்டான். வேதாகமமே அவனைக் குறித்து சாட்சியிடுகிறது. "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்" (1யோவான்3:9). அவருடைய வித்து என்று சொல்லும்போது அவருடைய வசனம் விதையாக இருக்கிறது. அந்த வித்து அவனுக்குள் விதைக்கப்படும்போது அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறான். அவன் வசனத்தினாலே பாவத்திலிருந்து மீட்கப்பட்டபடியினாலும், வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டபடியினாலும் அவன் பாவம் செய்யான். பொல்லாங்கன் அவனைத் தொடவும் முடியாது. இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்.

இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே நீ தேவனுடைய மனுஷனாயிருக்கிறாயா? அல்லது ஒரு உலகத்தானாயிருக்கிறாயா? நீ தேவனுடைய மனுஷனாயிருப்பாயானால் தேவனோடு நித்திய நித்தியமான வாழ்வை பெறும் பாக்கியத்தைப் பெறுவாய். நீ தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தித்து செயல்படு. பொய்யை தவிர்த்து மெய்யைப் பேசு. தேவனுடைய வசனங்களுக்கு செவிகொடு. அப்பொழுது நீ காப்பாற்றப்படுவாய். அநேகர் உன் மூலமாக கர்த்தரை அறிந்துகொள்ளவும், நீ ஒரு தேவனுடைய மனிதன் என்பதை எப்பொழுதும் நிருபிக்கவும் தவறிவிடாதே. தேவனுடைய மனுஷன் தேவனுடைய வழியில் செல்லும்போது எல்லாவகையிலும் ஆசீர்வதிக்கப்படுகிறான்.


"தேவனால் பிறந்த எவனும்
பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்;
தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்,
பொல்லாங்கன் அவனைத் தொடான்"
I யோவான்5: 18



*B.Arjunan, Preacher*
*Church of Christ*

# நாம் எப்படி ஜெபிக்கவேண்டும்?
# How Should We Pray?

*-J.C.Choate*



கிறிஸ்தவர்கள் தங்களுடைய பிதாவாகிய தேவனைக் கிட்டிச்சேர்வதற்கு ஜெபமே வழியாக இருக்கிறது. இதற்கான இன்னொரு வழி, இது நாம் தேவனிடத்தில் பேசுகின்ற முறையாகவும் இருக்கிறது. ஆனால் நாம் அதை எவ்வாறு நடைமுறைப் படுத்துகிறோம்? எவ்வழியில் நாம் நமது சிருஷ்டிகரை கிட்டிச் சேருகிறோம்?

நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் மரியாதை செலுத்தாமல், தாழ்மையில்லாமல், ஆராதிக்கும் ஒரு மனநிலையில்லாமல் எவ்வாறு நுழைகிறோம்? கிறிஸ்து, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்" (யோவா.4:24).

எப்படி ஜெபிக்கவேண்டும் மேலும் எப்படி ஜெபிக்கக் கூடாது என்பதை கிறிஸ்து நமக்குக் கூறுகிறார். அவர் அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்" (மத்.6:5-8) என்றார்.

கர்த்தர் தொடர்ந்து சீஷர்கள் எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென சொல்கிறார். அவர் மாதிரி ஜெபத்தில் பேசின வார்த்தைகளும் சீஷர்களுக்கு எவ்வாறு ஜெபிக்க வேண்டுமென கற்பித்ததும் கர்த்தருடைய சொந்த ஜெபமாகவே இருக்கின்றது. இருந்தாலும் இன்றும் தேவனோடு நாம் எப்படி பேச வேண்டும் என நாம் அவற்றின் முக்கியக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். கிறிஸ்து, "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக;

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே"(மத்.6:9-13).

ஏன் இந்த ஜெபம் இயேசுவின் நாமத்தில் கேட்கப்படவில்லை? கிறிஸ்து மனிதனை இரட்சிக்கும்படிக்கு அவனுடைய பாவங்களுக்காக, (அந்த வேளையில்) இன்னும் மரிக்கவில்லை மேலும் நம்முடைய மத்தியஸ்தராக மாறவில்லை. ஆனபடியினால், இன்று நாம் இந்த மாதிரி ஜெபத்தில் இரண்டு மாற்றங்களை உருவாக்குகிறோம். நாம் கர்த்தருடைய ராஜ்யம் வளரவும் பரவவும் ஜெபிக்கிறோம், மேலும் பிதாவை நோக்கி நம்முடைய ஜெபத்தினை இயேசுவின் நாமத்தில் முடிக்கிறோம் (2கொரி.1:2).

ஜெபமானது பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம், முதலாவது, அங்கே தேவனுக்கு மகிமை செலுத்தப்பட்டது. பிறகு சபை அல்லது ராஜ்யத்தைக் குறித்து இயேசு வற்புறுத்திச் சொன்னார், மேலும் சீஷர்களுக்கு அது சீக்கிரமாக வரும்படிக்கு ஜெபிக்க கற்றுக்கொடுக்கின்றார்.

இரண்டாவதாக, அவர் சரீரம் மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கும் படி கற்றுக்கொடுத்தார்.

இயேசுவின் ஜெபத்தில் மூன்றாவது காரியம், மன்னிப்பைக் குறித்து...... நாம் தேவனுடைய மன்னிப்பைப்பெறவும், நமக்கு விரோதமாக குற்றஞ்செய்தவர்களை நாம் மன்னிக்க வேண்டுமென்பதையும் அறிவுறுத்தினார்.

நான்காவதாக, நாம் சோதனையிலிருந்தும் பாவத்திலிருந்தும் நீங்கும்படிக்கு தேவனுடைய உதவியைக் கோரவேண்டும் என கற்பிக்கப்படுகிறோம்.

ஐந்தாவதாக, தேவனை மகிமைப்படுத்துவதோடும், எல்லா வல்லமையும் மகிமையும் அவருடையவைகளே என அறிக்கையிடுவதோடும் இயேசு ஜெபத்தினை நிறைவு செய்கிறார்.

இந்த ஜெபம் ஒரு சுருக்கமான ஜெபமாகயிருந்தது ஆனால் இது நாம் ஜெபிக்கவேண்டிய அடிப்படை மற்றும் பொதுவான தலைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஜெபமாகும். இவைகள் நம்முடைய இருதயங்களிலிருந்து ஊற்றப்படும் அதிகமான தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தேவைகளுக்காகவும், அவர் நம்மை போஷித்து உதவிசெய்வார் என பாவங்களை அறிக்கையிட்டு ஜெபிக்கிறதாகவும் இருக்கலாம்.

இங்கே தனி ஜெபங்களும் பொது ஜெபங்களும் உண்டு (லூக்.9:18, அப்.12:12) நாம் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும் (மாற்.11:25). நாம் முழங்காலில் நிற்கின்ற இடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களும் (அப்9:40) உண்டு.

இரவும் பகலும் தொடர்ந்து ஜெபிக்கின்ற ஜெபங்களும் (1தெச.3:10). நாம் இடைவிடாமல் ஜெபிக்கவும் அல்லது ஜெபசிந்தையோடு நாம் வாழவும் அறிவுறுத்தப்படுகிறோம் (1தெச.5:17).

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் ஜெபிக்கிறீர்களா? ஜெபத்தினைக் குறித்து உங்களுடைய கருத்து என்ன? நீங்கள் தேவன் உங்களை நேசிக்கிறார் உங்களுடைய ஜெபத்தினைக் கேட்கிறார் என்று நம்பி விசுவாசத்துடன் ஜெபிக்கிறீர்களா?

நம்முடைய பிதாவை ஜெபத்தின் மூலம் கிட்டிச்சேரும் பாக்கியம் பெற்றுள்ள நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்! நாம் இவ்வாறு செய்து நம்முடைய ஜெபத்தின் முடிவில் எப்பேர்பட்ட வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம்!

## Bible Statistics

| | | | |
|---|---|---|---|
| *Questions* | *- 3,296* | *Shortest Chap.* | *- Ps.117* |
| *Longest Name* | *- Isa.8:1* | *Largest Book* | *- Psalms* |
| *Longest Verse* | *- Esther8:9* | *Smallest Book* | *- 3John* |
| *Shortest Verse* | *- Jon.11:35* | *Longest chap.* | *- Ps.119* |
| *Middle Verse* | *- Ps.118:8* | *Word GOD occurs 3,358 times* | |

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவின் முதல் பெண் ரெயில் ஓட்டுனர் யார்?
   அ)செல்வி.சுப்ரியா ஆ)செல்வி.சுலேகாராய் இ)செல்வி.சுரேகா யாதவ்
2. அதிக எழுத்துக்களை கொண்ட மொழி எது?
   அ)சுமேரிய மொழி ஆ)கம்போடிய மொழி இ)தமிழ் மொழி
3. எந்த நாட்டில் கோட்டைகள் அதிகம்?
   அ)செக்கோஸ்லோவாகியா ஆ)இந்தியா இ)எகிப்து
4. ஜப்பான் நாடு எத்தனை தீவுகளைக் கொண்டது?
   அ)3,900 தீவுகள் ஆ)3.000 தீவுகள் இ)4,008 தீவுகள்
5. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் இந்தியர்களில் நீதிபதியாக பதவி ஏற்றமுதல் நபர் யார்?
   அ)ரதி தேசாய் ஆ)பி.ஏ.சங்மா இ)ஆர்.எஸ்.சர்காரியா

**விடைகள்:1.செல்வி.சுரேகா யாதவ் 2.கம்போடிய மொழி 3.செக்கோஸ்லோவாகியா 4.3,900 தீவுகள் 5.ஆர்.எஸ்.சர்காரியா**

## ஆன்மீக ஆலோசனை

"உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்"

(ரோமர்12:9)

பெண்கள் பகுதி

# “இது எல்லாம் சரி” “It`s All Right”




நீ சின்னப்பிள்ளையாய் இருந்தபோது
-ஒரு குழந்தை எனது கால்களின் மேல்-
நீ கால் இடறி விழுந்தாய்,
உன்னைத் சுத்தம் செய்யவும்
உனது வாழ்க்கைப் பிரச்சனைகளைத்
தீர்க்கவும் முடிந்தது என்னால்,
**“தேனே இது எல்லாம் சரி, ”**


மேலும் வயதான போது,
சில நண்பர்கள் வருத்தப்படுத்தியதினால்
அல்லது ஏமாற்றத்தினால் நீ கதறினாய்
இன்னும் கண்ணீரைத் துடைத்து
காயத்தினை ஆற்றமுடிந்தது என்னால்
கவலை கொள்ளாதே,
**“தேனே இது எல்லாம் சரி.”**

வார்த்தைகள் பல வாலிப வருடங்களில்
தோற்றுப் போயிருந்தன
இருதயம் மாட்டிக்கொண்ட போது
காத்திருக்க வேண்டியிருந்தது பல வாரங்கள்
-சில நேரங்களில் பல மாதங்கள்-
உடைந்து போன கனவுகள் சரிசெய்யப்பட
மேலும் திரும்பவும் நம்பிக்கை கொள்ள,
**“தேனே இது எல்லாம் சரி, ”**

இப்போது நாம் நன்கு அறிந்தவர்கள்;
நமது உலகங்கள், நமது காயங்கள், மாறியுள்ளன;
அவைகள் மிக மிக ஆழமானவை
மேலுும மிக மிக மாட்டிக்கொண்டவை சில
நேரங்களில்
முத்தம் இல்லை நம்பிக்கையூட்டும் தட்டிக்
கொடுத்தல் இல்லை
தவறை சரி செய்யக்கூடிய வார்த்தை இல்லை.
ஓ, எனது சின்ன பிள்ளையே
உனது வட்டமான கண்களை நிரப்புகின்ற
வருத்தமான விம்மல்களை நிறுத்திவிட
விசனத்தை அப்புறப்படுத்த வாஞ்சிக்கிறேன் நான்;
திரும்பவும் வார்த்தைகள் கிரியைசெய்யும்வரை
இக்காலம் திரும்பிவிட வாஞ்சிக்கிறேன் நான்;
கவலை கொள்ளாதே, தேனே,**“இது எல்லாம் சரி”**
ஆனால் இவ்வாறெல்லாம் தேவனால் செய்யக்கூடும்.



**-Betty Burton Choate**



## கர்த்தர் வருகிறார்
## Maranatha

*-Glory Arjunan*

கர்த்தர் வருகிறார் என்ற செய்தி உங்களுக்குக் களிப்பை உண்டாக் குகிறதா? அல்லது கலக்கத்தை உண்டாக்குகிறதா? எதுவாயிருந்தாலும் கர்த்தர் வருகிறார் என்பது நிச்சயம். ஆம், அவர் சீக்கிரமாய் வருகிறார் என வேதம் கூறுகிறது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.."(1தீமோ.1:15). இவ்வாறாக பூமிக்கு வந்த கிறிஸ்து இயேசு நம்மை பாவத்திலிருந்து விடுவித்து காக்கும்படிக்கு சிலுவையிலே தம்முடைய இரத்தத்தை சிந்தி மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அப்போஸ்தலருக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்.1:3). மட்டுமல்ல "....அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார், ....வெண்மையான வஸ்திரந்தரித் தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ..உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"(அப்.1:9-11).

அன்பு சகோதரிகளே, இதைக்குறித்து இன்று அநேகர் பரியாசம் பண்ணுகின்றனர். சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக் கிறதே என்று சொல்லுவார்கள். "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:8,9). ஆம், நம்மை உண்டாக்கின நம்முடைய தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். நம்மைக் காக்கும்படிக்கு, வரவிருக்கும் அழிவிலிருந்து விடுவிக்கும்படிக்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே தான் இங்கு "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்" என ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். அன்பு சகோதரியே, நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்களா? இல்லை, நாங்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் தான், எங்களுடைய முன்னோர்கள் சபை போதகராகவும், உபதேசியாராகவும் இருந்தார்கள். அவர்கள் வழி வந்தவர்களாகிய நாங்கள் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறோம் என்று சொல்லி திருப்தியடைந்தவர்களாய் காணப்படுகிறீர்களா?

பேதுரு, "..நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.."(அப்.2:38) என்று யாரைப்பார்த்து பிரசங்கித்தான்? நசரேயனாகிய இயேசுவை அறிந்திருந்த யூதரைப் பார்த்தல்லவா! (அப்.2:22). அவர்களுக்கே மனந்திரும்பவேண்டியது அவசியமாயிருந்ததென்றால் புறஜாதியாராகிய நமக்கு அது எவ்வளவு அவசியம்! எனவே "மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" ஏற்கனவே நான் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன் என்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருப்பீர்கள். தேவனுடைய சித்தத்தின்படி முதலாவது கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம்மை பாவமறகழுவ வல்லமை யுடையது என அறிந்து பாவத்திற்காக மனந்திரும்பி, பிறகு அப்பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.இப்படிச் செய்யும் போது மட்டுமே நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவீர்கள். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களாயுமிருப்பீர்கள்.


அன்பு சகோதரிகளே, உலகில் ஒவ்வொரு நாளும் திடீர்திடீரென்று மாற்றங்கள் பல ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட சுனாமி பேரழிவு உலகத்தையே உலுக்கி விட்டது. இந்த அழிவு இன்னும் நம்முடைய நினைவிலிருந்து நீங்காமல் உலுக்கிக் கொண்டிருக்கிறது. இதைப்போன்ற சம்பவம் நோவா காலத்தில் ஏற்பட்டது. "அப்போது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வர்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. ......இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2பேது3:6-11) என வேதம் கூறுகிறது. அன்று நோவா தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தான், நேவாவின் மனைவி நோவாவுக்குக் கீழ்ப்படிந்தாள், அவனுடைய பிள்ளைகளும், மருமக்களும் கீழ்ப்படிந்தனர் ஆனபடியினால் காக்கப்பட்டனர்.

இதோ "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது.3:10). நாமோ பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது நாம்மட்டுமல்ல நம்முடைய கணவன் நம்முடைய பிள்ளைகள் நம் குடும்பத்தார் அனைவரும் இவ்விதமாய் நடக்கவேண்டும். நோவாவும் அவன் குடும்பமும் காக்கப்பட்டது போல் நாமும் நம்முடைய குடும்பமும் காக்கப்பட வேண்டும். உலகத்திலுள்ள அனைவரும் காக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவபக்தியுள்ளவர்களை கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் (யூதா15). கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

# போராட்டம் உங்களுக்கும் உண்டு

## A Fight For You Also

*K.P.Thangaraj, Preacher*
*P.O.BoX.54, Mettupalayam - 641 301,*
*COIMBATORE DIST. Mbile:93446 50084*



அன்பான கிறிஸ்துவின் வசன இதழ் வாசகர் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தினால் வாழ்த்துக்கள்.

நமது அன்றாட வாழ்வில் காலை படுக்கையைவிட்டு எழுந்ததுமுதல் இரவு படுக்கைக்கு செல்லும்வரை போராட்டங்கள் ஓய்வதில்லை. நமது போராட்டத்தில் வெற்றியையும் ருசித்து இருக்கிறோம். தோல்வியையும் சந்தித்திருக்கிறோம். இது நமக்கு பழகிபோன ஒன்று. நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் போராட்டம் முற்றிலும் மாறுபட்டதாகும். ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையே மனிதனுக்கு நடக்கும் போராட்டம். மனுகுலம் உண்டானது முதல் இன்றுவரை நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தைப் பற்றிப் படிப்போம். மனித வாழ்வில் போராட்டம்: "வாழ்வு என்பது போராடும் போர்களம்" இந்த வாக்கியத்தை எங்கேயோ கேட்டது என்பது போல இருக்கிறதல்லவா? ஆம், நாம் இந்த போர்க்களத்தில் (உலகத்தில்) அநேக வெற்றிகளையும், தோல்விகளையும் கண்டு இருக்கிறோம். இந்த போராட்டம் தற்காலிகமானது. ஆனால் "நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டம் உங்களுக்கும் உண்டு" என்கிறார் பவுல் (பிலி.1:30). இது நிரந்தரமான போராட்டம்.

1. ஆவிக்கும் மாம்சத்திற்குமிடையே நடந்த போராட்டத்தை சந்தித்தவர்களில் சிலரைப் பற்றிப்படிப்போம்.

ஆதாம், ஏவாள்: "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியதக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). இந்த மரணம் ஆவிக்குரியது. "அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை" என்றது (ஆதி.3;4). இந்த மரணம் மாம்சத்திற்குரியது. இந்த போராட்டத்தில் ஆதாமும், ஏவாளும் மாம்சத்திற்குரியதைத் தெரிந்து கொண்டனர். இதில் வெற்றி கண்ட சாத்தன் மகிழ்ச்சியடைந்தான். தேவன் அதிகம் மனஸ்தாபப்பட்டு வேதனையடைந்தார். தேவன் மனுஷனுக்கு தெரிந்து கொள்ளும் உரிமையைக் கொடுத்தார் அவர் வார்த்தையை மீறியதால் மனிதனால் தண்டனையிலிருந்து தப்பமுடியாமல் போயிற்று. இவர்கள் மாம்சத்துக் குரியவைகளைத் தெரிந்து கொண்டதின் விளைவு இந்த நிமிடம் வரை நாம் அனைவரும் தவிர்க்க முடியாமல் போராடியே வருகிறோம்.

மோசே: "விசுவாசத்தினால் மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு" என்று வாசிக்கிறோம் (எபி.11:24,25). மோசே ஆவிக்கும் மாம்சத்திற்குமிடையே நடந்த போராட்டத்தில் ஆவிக்குரியதைத் தெரிந்து கொண்டார். இதன் மூலம் கிடைத்த வெற்றியின் விளைவை நாமனைவரும் கிறிஸ்துவின் நிமித்தம் (எபி.11:26) தேவன் நமக்கு இன்று கொடுத்திருக்கிறார். ஆதலால் நமக்கு மாபெரும் போராட்டம் உண்டு.

"ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு" (எபே.6:12). ஆகவே இன்று நாம் அனைவரும் போராடி மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

2. வேதத்தில் போராடி வெற்றிபெற்றவர்களின் நிகழ்வுகள் நமக்கு எச்சரிப்பைக் கொடுக்கிறது.

யாக்கோபு: "யாக்கோபு பிந்தி தனித்திருந்தான் அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார். அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடை சந்து சுளுக்கிற்று. அவர் நான் போகட்டும் பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன் நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்றான். அப்பொழுது அவர் உன் பெயர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும். தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்" (ஆதி.32:24-28). இவ்விதமாக தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தார் என்பதை அறிகிறோம். யாக்கோபு, "தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிங்காலைப்பிடித்தான். தன் பெலத்தினால் தேவனோடே பேராடினான். அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான் அப்பொழுது அவரை நோக்கி கெஞ்சினான்..." (ஓசி.12:3,4). யாக்கோபு ஆசீர்வாதத்தை பெற அழுது, கெஞ்சி போராடி பெற்றுக் கொண்டான். இந்த சம்பவம் இன்று நமக்கு "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும், நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கும் முன் எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது (ரோம.15:4).

3. பவுல்: "நீங்கள் தேவனை நோக்கி செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பின் நிமித்தமும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோம.15:32). பவுல் ஜெபத்தில் போராடியதை நாமும் பின்பற்றுவோம். "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப்

பிரயாசப்படுகிறேன்" என்கிறார் (கொலோ.1:29). இது நம்மை உற்சாகப்படுத்துகிறது.

4. யூதா: "பிரியமானவர்களே பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய் கண்டது யூதா3-ம்வசனம்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களே! நீங்கள் ஆவிக்குரியவைகளைத் தெரிந்து கொண்டு கிறிஸ்துவுக்குள் வாழ்வீர்களானால், அப்படியே தொடர்ந்து வசனத்தின்படி ஆவிக்குரியவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் என பிலி.4:8-ன்படி நினைப்பூட்டுகிறோம்.

அன்பர்களே நீங்கள் ஆவிக்குரிய வாழ்வை பெற வேத வசனத்தைக் கேட்டு ரோம.10:17-ன்படி விசுவாசித்து, அப்.16:30,31; யோ.3:16-ன்படி மனந்திரும்பி, லூக்.13:3; அப்.17:30-ன்படி இயேசுவை தேவனுடைய குமாரன் என உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து, ரோம.10:9,10-ன்படி ஞானஸ்நானம் அப்.2:38-ன்படி பெற்று கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை பெற அன்புடன் அழைக்கிறோம்.

பிரதான பாவியாகிய பவுல் "நல்ல போராட்டத்தை போராடினேன்.." (2தீமோ.4:7) என்று கூறுகிறார். நாமும் ஆவிக்கும் மாம்சத்திற்குமிடையே நடக்கும் போராட்டத்தில் போராடி "நல்ல போராட்டத்தை போராடினேன்" என கூற ஆயத்தப்படுவோம்!


## கிறிஸ்துவின் சபை பிரசங்கியார் கருத்தரங்கு

## The Church of Christ Preachers' Seminor

★நீங்கள் ஒரு கிறிஸ்துவின் சபை பிரசங்கியாரா? இக்கருத்தரங்கிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

★ஊழியப்பாதையில் உங்களுக்கு வேதாகமத்தின் ஆலோசனைகளை வழங்கவும், ஊழியத்திற்கு தேவையான உபகரணங்களை வழங்கவும் உள்ளோம்.

★இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஒரு வழி பயணசெலவு, மதிய உணவு வழங்கப்படும். (உங்களுடைய பஸ் பயணசீட்டை பத்திரமாக கொண்டுவரவும்)

★நாள்: 27.03.2009 நேரம்: காலை 10.00 மணி

★இடம்: பிரிச் இல்லம், 2/310 F கே.பி.சதுக்கம், வி.பி.நகர்.காரமடை 641 104.

★வழிதடம்: மேட்டுப்பாளையம் - கோவை மெயின்ரோட்டில் ஆசிரியர் காலனி என்ற இடத்தில் இறங்கவும்.

★வரும்போது இந்த அழைப்பு இதழை கொண்டுவரவும்.

★சகல தொடர்புக்கும்: *K.P.Thangaraj, co-ordinator*
*P.O.BoX.54, Mettupalayam - 641 301,*
*COIMBATORE DIST. Mbile:93446 50084*

## ஆசை

1. ஆமானுக்கு யூதர்களை அழிக்க ஆசை - எஸ்3:8,9
2. யோபுவின் மனைவிக்கு தேவனைத் தூஷிக்க ஆசை - யோபு2:9
3. யோனாவுக்கு தர்ஷிசுக்குச் செல்ல ஆசை - மத்2:13
4. ஏரோதுக்கு இயேசுவைக் கொல்ல ஆசை - மத்2:13
5. ஏரோதியாளுக்கு யோவான் ஸ்நானகனின் தலையின் மீது ஆசை - மத்14:8
6. யூதாஸ்காரியோத்துக்கு 30 வெள்ளிக்காசின் மீது ஆசை - மத்26:14,15
7. பேதுருவுக்கு மறுபடியும் மீன் பிடிக்க ஆசை - யோவா21:3
8. அனனியா சப்பீராளுக்கு காணியாச்சியை வஞ்சிக்க ஆசை - அப்5:1,2
9. யூதர்களுக்கு இயேசுவை சிலுவையில் அறைய ஆசை - மத்27:22
10. சவுலுக்கு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆசை - அப்9:1,2

ஆனால் பிசாசுகள் நீங்கின மனுஷனுக்கோ இயேசுவோடு இருக்க ஆசை - லூக்8:38


P.அவிஸ்மேரியம்மாள்

## வேதஅறிவுப்போட்டி எண் 102-ன் விடைகள்

1. ஆமோஸ் - ஆமோ3:7
2. புதிதாக்கப்படுகிறது -2கொரி4:16
3. மீகா - மீகா6:11
4. கனத்தை, கனவீனத்தை - நீதி3:35
5. பவுல் - கலா2:11
6. புறக்கணியார் - சங்69:33
7. ரோம - ரோம11:21
8. பிரசங்கி - பிர3:21
9. மனுஷர் - எசே34:31
10. பவுல் - அப்25:24

## வேதஅறிவுப்போட்டி எண் 102-ல் வெற்றிபெற்றவர்கள்

1. P.S.மரகதம் - நாமக்கல்
2. J.நிர்மலாஜான் - மதுரை
3. R.சாமுவேல் - ஊதியூர்
4. G.பூங்கோதை - கோபி
5. G.P.ஏசையன்ராஜ்-கோபி
6. N.கமலவேணி - சென்னை
7. V.கோவலன் - மதுரை
8. M.ராமச்சந்திரன் - தூத்துக்குடி
9. R.கஸ்தூரி - தூத்துக்குடி
10. Sis.குளோரி - சென்னை
11. R.கிப்ஃட் ராஜா - தூத்துக்குடி
12. L.ஸ்டிபன் -அலங்காநல்லூர்
13. Mrs.மெல்ஸிடா - திண்டுக்கல்
14. Mrs.கிரோனாப்விக்டர்-வதிலை
15. A.ஆனந்த் - நாகமலை
16. J.ஜாய் வாசுகி - கோவை
17. S.J.ஜீவிதா - கோவை
18. Mrs.ஒலியாம்மா - கடலூர்
19. R.பவுல் சாமுவேல்-பிடாரியூர்
20. R.அருண்குமார்- பிடாரியூர்
21. V.ராஜு - ஆனையூர்
22. N.ஜூலியட் நித்தியானந்தம்-
23. M.ராஜுவிமல் -கோவை
24. P.பாண்டியம்மாள்- கோவை
25. K.ராகேல் - கோவை
26. Mrs.மெர்ஸிடக்லஸ்- கோவை
27. M.ராஜேஸ்வரி - நாகை
28. N.ஜான் செல்லையா - மதுரை
29. P.செல்வி ரேணுகா - தென்காசி
30. S.பாக்கியராஜ் -திண்டுக்கல்
31. G.A.ஜான்சன் -திருச்சி
32. A.ஜோதிகாந்தம் - வேலூர்
33. Mrs.மரகதம்திரவியம் - கோம்பை
34. K.மோகன் - கொடாளை
35. J.ஐசக் - திருநெல்வேலி
36. R.ராஜமாணிக்கம்-கோவை
37. D.கண்ணன் -கோவை
38. T.பவுல் -கோவை
39. V.F.ஷர்லோ -பாண்டி



# 12 சந்தோஷத்தின் விதிகள்
# 12 Rules of Happiness

1. **எளிமையான வாழ்க்கை.** ஒவ்வொரு நாளும் பல காரியங்களைத் திட்டமிடாதே. உன்னுடைய வாழ்க்கைப் பாங்கில் மிதமாக நிதானமாக இரு.
2. **நீ சம்பாதிப்பதை விட குறைவாக செலவுசெய்.** இது செய்வதற்குக் கடினமாகயிருக்கலாம், ஆனால் இது உன் மனதிருப்தியிலும் மன அமைதியிலும் பெரிய பிரதிபலன்களை கொடுக்கிறது.
3. **உருப்படியானவற்றை நினை.** உன்னுடைய மனதில் பயனுள்ள நினைவுகளை சேமித்துவை. ஒருவன் தன் இருதயத்தில் நினைக்கிறபடியே, அவன் இருப்பான்.
4. **இணக்கமுள்ள விருப்பத்தை வளர்த்துக்கொள்.** உன்னுடைய சுயவழியை விரும்புகின்ற மனோபாவத்தைத் தடுத்து விடு. மற்றொருவனுடைய கருத்தினை அறிய முயற்சிசெய்.
5. **நன்றியுள்ளவனாயிரு.** உனக்குக் கிடைத்துள்ள அனைத்து ஆசீர்வாதங்களுக்காக நன்றிசெலுத்தும் ஜெபத்துடன் ஒவ்வொரு நாளையும் துவக்கு. நீ நன்றியுள்ளவன் என்பதை தேவன் அறியட்டும்.
6. **உன்னுடைய மனநிலைகளை ஆண்டுகொள்.** உன்னுடைய மனோநிலை மற்றவர்களோடு சமாதானத்துடன் வாழ்வதில் மிக முக்கியமானது.
7. **உதாரத்துவமாய் கொடு.** உன்னுடைய நேரம், தாலந்துகள், தனிப்பட்ட குணம், பணம் போன்றவற்றினுடைய புத்தியுள்ள அர்ப்பணம் பெரிய மகிழ்ச்சியைக் கொண்டுவரும்.
8. **சரியான உள்ளெண்ணத்துடன் வேலை செய்.** தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் அன்பு செலுத்துவதில் வளருவதை நாடு, உன் வாழ்வில் முதலாவது தேவனுடைய சித்தத்தினைத் தேடு.
9. **மற்றவர்களிடத்தில் அக்கறையுள்ளவனாயிரு.** மற்றவர்களுக்குச் செய்கிற நம் சேவையில், தானாய் கொடுக்கும் வாழ்வில் இன்னொரு பொருளை உற்பத்திசெய்வதைப் போன்ற சந்தோஷத்தினை நாம் அறுவடை செய்கிறோம்.
10. **இன்று அதிகமானவற்றை உருவாக்கு.** ஞானமாய் இந்நாளை பயன்படுத்து அப்போது வருத்தமின்றி திரும்பிப் பார்ப்பாய்.
11. **பொழுது போக்கிற்காக நேரத்தை ஒதுக்கு.** ஒய்வு நேரத்தை விருப்பத்துடன் செலவழித்தால் கடினமான சூழ்நிலையிலிருந்து தளர்வினையும் பொழுது போக்கினையும் உனக்குக் கொண்டுவரும்.
12. **தேவனிடத்தில் நெருக்கமாக நிலைத்திரு.** நிலையான சந்தோஷம் தொடர்ச்சியான ஆவிக்குரிய போஷாக்கினைச் சார்ந்துள்ளது. தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால், நாம் அவருடைய நிலையான அன்பு மற்றும் பராமரிப்பின் வாக்குத்தத்தினைப் பெற்றிருக்கிறோம்.

# இரட்சிப்பு என்று ஒன்று உண்டா?
# Is There The Salvation?



*G.Daniyal,Preacher*
*1.6th Street, Mandapam Road*
*Kilpauk,Chennai - 600 010*

இன்று உலகில் அநேகர் குறிப்பாக படித்தவர்கள் மத்தியில் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி உண்மையாகவே இரட்சிப்பு என்று ஒன்று உண்டா? என்பதாகும். ஆங்கிலத்தில் Redemption - மீட்பு Salvation - இரட்சிப்பு, Forgiveness of sin - பாவ மன்னிப்பு என்ற வார்த்தைகள் இரட்சிப்பைக் குறிக்கின்ற வெவ்வேறு வார்த்தைகள். பாவ மன்னிப்பைக் குறித்து அநேக போதனைகள் உலகில் உண்டு. எல்லா மதங்களும், மார்க்கங்களும் தீமையை விட்டு மனந்திருந்தி நீதியான வழியில் வாழவேண்டுமென்று போதிக்கின்றன. இதிலிருந்து வாழ்க்கையில் நீதியும், அநீதியும் உண்டு என்பது நன்கு தெரிகிறது. இந்த அநீதியிலிருந்து, அதாவது பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவதுதான் இரட்சிப்பு.

**யார் மனிதனை அவனுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கக்கூடும்?**

இன்று உலகில் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் அபாயத்திலிருந்து யார் நாட்டைக் காப்பாற்ற முடியும்? என்ற கேள்வி எழும்போது ஒரு குறிப்பிட்ட தலைவரால் தான் முடியும் என்று பெரும்பான்மை மக்கள் சொல்லுவதைக் கேட்கிறோம். அதுபோலவே மனுக்குலத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க கடவுளின் திட்டத்தினால் மட்டுமே முடியும். கடவுள் மனிதனையும் மனுஷியையும் உண்டாக்கி அவர்களுக்கு ஆதாம், ஏவாள் என்று பெயரிட்டு ஏதேன் என்னும் தோட்டத்தில் சகல ஆசீர்வாதங்களுடன் வைத்தார். ஆனால் இருவரும் சாத்தானின் வஞ்சனையால் விலக்கப்பட்ட கனியைப் புசித்தபோது பாவம் முதலாவது மனுக்குலத்திற்குள் பிரவேசிக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஏதாவது ஒரு பாவம் அவனை தேவனிடமிருந்து பிரித்து உலக அநீதியில் கொண்டுபோய் விடுகின்றது (ரோம.3:23).

கடவுள் இந்த மனுக்குலத்தை முற்றிலும் இரட்சிக்க சித்தங்கொண்டு தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்தப் பூவுலகுக்கு அனுப்பினார். வேதப் புத்தகத்திலே இயேசு என்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று மத்தேயு1:21-ல் சொல்லப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்ததன் நோக்கம்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது என்று 1தீமோத்தேயு1:15-ல் பவுலடியார் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஆக எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்

சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (கடவுள்) சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று 1தீமோத்தேயு2:4-ல் குறிப்பிடுகின்றார். இவைகளை கூர்ந்து நோக்குங்கால் தேவன் மனுக்குலத்தின் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பதையும், அவர்களைச் சகல பாவத்தினின்றும் மீட்டு மகிழ்ச்சியாக வாழச் செய்ய சித்தமுள்ளவராயிருப்பதையும் அதன் பொருட்டே தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் எல்லோருடைய பாவங்களையும் சுமந்து தீர்த்து, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே மரணத்தை வென்று உயிர்த்தெழச் செய்தார் என்பதையும் தெளிவாக அறிய முடியும்.

இந்த மாபெரும் உண்மைகள் நிச்சமாகவே இரட்சிப்பு உண்டென்பதை பறை சாற்றுவதை ஐயமற உணர முடியும். இந்த இரட்சிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காண்போம்.

**1. முதலாவது இரட்சிப்பைக் குறித்த உண்மைகளைத் தெளிவாகக் கேட்டு புரிந்து விசுவாசிக்க வேண்டும்.**

"விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர்10:17)

**விசுவாசம் என்றால் என்ன?**

நீங்கள் கடவுளிலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவானவரிலும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வேதவாக்கியங்களிலும் நம்பிக்கைவைத்து அதன்படி செயல் படுவதே விசுவாசம். பின்வரும் வேத வாக்கியங்கள் இதை நமக்குத் தெளிவுபடுத்தும்.

1. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபிரெயர்11:6).

2. ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவான்8:24).

3. ஆனால் விசுவாசம் மட்டுமே உங்களை இரட்சித்து நீதிமானாக்கப் போதுமானதல்ல என்ற உண்மையை யாக்கோபு2:24 -ல் காண்கிறோம்.

4. அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசமே இரட்சிக்கும் என்ற சத்தியத்தை கலாத்தியர்5:6-ல் வாசிக்கிறோம். தேவனுக்கேற்ற துக்கம் உங்களை பாவத்திலிருந்து மனந்திருந்தி வாழ வழி நடத்த வேண்டும். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2கொரிந்தியர்7:10).

5. நாம் விசுவாசித்து மனந்திருந்தியதற்குப் பின்பு இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும். பின்வரும் வேத

வாக்கியங்கள் இதைத் தெளிவாக்குகின்றன. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்பு உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர்10:10).

6. இரட்சிக்கப்படும்படியாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறவேண்டும்.

அ) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்.16:16).

ஆ) இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப்.22:16).

இரட்சிக்கப்படுவதற்கு மேற்சொல்லப்பட்டிருக்கும் வேத வாக்கியங்களைப் படித்து விசுவாசித்து மனப்பூர்வமாக இவைகளின்படி செயல்பட்டால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் இதில் நாம் எதையாவது முன்னுக்குப் பின் முரணாகச் செய்வது வேதத்துக்கு மாறுபடுமாதலால் இரட்சிக்கப்பட முடியாது. ஆகவே நாம் சரியாக வேதத்தின் போதனைகளின்படி செய்ய கவனமாயிருப்போம்.

இந்தப் பிரகாரம் இரட்சிக்கப்பட்டபோதே தேவன் வாக்களித்த பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38).

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு ஒவ்வொரு நாளும் புதிய ஏற்பாட்டின் ஆரோக்கியமான போதனைகளின்படி மட்டுமே வாழ்ந்தால் இம்மையில் தேவசமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதங்கள் மறுமையில் நித்திய ஜீவன் கிடைப்பது உறுதியே.

**பின்வரும் வேத வார்த்தைகளை ஆழ்ந்து நோக்குக:**

1. மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை தருவேன் (வெளி.2:10).

2. ஏனெனில் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி நாம் அவ பக்தியையும், உலக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி (தீத்து2:11,12).

3. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும்,அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேது.3:18).

இப்பேருண்மைகளை வாசிக்கும் அன்பரே உலகில் நிலையற்ற அநேகத்தின் பேரில் மனிதன் தன் மனதைச் செலுத்தி ஆராய்ந்து, முடிவில் சமாதானமின்றி இருப்பதை கேட்கிறோம், பார்க்கிறோம், படிக்கிறோம். பாவத்தினின்று எப்போது இரட்சிக்கப்படுவது சிலர் எல்லாம் முடிந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்றிருப்பார். அப்படி இருக்கலாகாது. இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் (2கொரிந்தியர்6:2). தீயினும் கொடிய பாவத்தினின்று இரட்சிக்கப்பட இன்றே நல்ல தீர்மானம் செய்வீராக.

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -16

## இயேசுகிறிஸ்து - JesusChrist

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



### *NERO* - நீரோ

ரோம கடைசி மன்னன்
நீரோவின் உருவப்படம் ரோமானிய தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது. ரோமாபுரி.

*–சென்ற மாததொடர்ச்சி*

இவனைப் பற்றி கிறிஸ்தவர்கள் அல்லாமல் கற்றறிந்த உலக மக்களெல்லாம் அறிவர். ஓர் கொடுங்கோலன். தன் சொந்த குடும்பத்தாலும் பொதுமக்களாலும் வெறுக்கப்பட்டவன், அவனின் கொடுங் கோலாட்சியை எதிர்த்தனர், வெறுத்தனர் அவனை கொடும்பாவியாக கருதினர். (கொடும்+பாவி) எறிக்கப்படுவது இவனைப் போன்றவர்களுத்தான் போலும்) நீரோ கிளாடியஸ் சீசர் அகஸ்டஸ் ஜெர்மானிக்கஸ் (இவனது இயற்பெயர் லூசியஸ் பிரகாசம்) டொடாமிஷியஸ். அஹெபீனா பார்பாஸ் இவனுடைய தாயின்பெயர் (Agrippina.Jr. இளைய அக்ரிப்பினா. தந்தை (Naeus Domitius Abenobarbus) கினேயஸ் டொமிடஸ் அபினோபார்பஸ் கி.பி 15-12-37 பிறந்தான். இவனின் தாய் பேரரசர் கிளாடியாஸை மணந்த பின் கி.பி 53-ல் தத்தெடுக்கப்பட்டான். தனது சொந்த மகனான (Briyanicus) பிரிட்டானிக்கஸ் இவனின் பாதுகாப்பில் வளர்க்கப்பட்டான். நீரோ கி.பி.53-ல் கிளாடியஸ் பேரரசரின் மகளான (Octavia) ஒக்டாவியாளை மணந்தான். நீரோவின் தாய் தொடர்ந்து பல முறை விஷத்தை கொடுத்து பேரரசர் கிளாடியஸை சாகடித்தாள். அவனின் மரணத்திற்கு பிறகு நீரோ ரோமின் அரசனானான். தொடக்ககாலத்தில் ஆட்சியுரிய தனது தாயும், தனது ஆசானும், ஆலோசனையாளுமான செனிகா லூயீஸ் அன்னியஸ் (Seneca Lucius Annaeus கி.மு 4, கி.பி.65) என்ற ரோமானிய தத்துவஞானி, அரசியல் மேதை, நாடக ஆசிரியர் (இவரின் நாடகத்தின் அடிப்படையில் வில்லியம் ஷேக்ஸ் பியரின் (1593 - 1594) டைட்டஸ் ஆன்ரோனிகஸ் (1593 -94 ) ஜான் வெப்ஸ்டரீன், திடச்சஸ் ஆஃப் மால்ஃபி (1613) ஆகியவையாகும். இவர் நீரோவுக்கு உதவியாக கி.பி.54 முதல் 62 வரையில் பணிபுரிந்தார். நீரோவின் ஆட்சிகாலத்தில் பொருளாதார சீர்கேடும், வேலையில்லா திட்டமும் (2008 மற்றும் 1931-ல் உலக பொருளாதார) வீழ்ச்சி ஏற்பட்டது அச்சமயம்

அரசியல் ஆலோசகர்களின் அறிவுரைகளை கேட்க மறுத்தான். செனட் சபையை மதிக்காமல் தன் சுயமதியினால் தன் உல்லாச வாழ்விற்காக பொதுமக்களுக்கு சொந்தமான இடத்தை காலிசெய்ய பலமுறை ஆணையிட்டும் மக்கள் அதனை காலிசெய்து கொடுக்காமல் இருந்தபோது அதனை தீயிட்டு கொழுத்தி அங்கே டோமஸ் அவுரியா அரண்மனையைக் கட்ட எண்ணினான். தீயினால் பாதிக்கு மேற்பட்ட ரோமாபுரி அழிந்தது. அதற்கு காரணம் கிறிஸ்தவர்கள் தான் என்று பொய் வதந்தியை கிளப்பினான். மேலும் அவர்களை துன்புறுத்திய போதும் மக்கள் அவனை நம்பவில்லை. தன்னாட்சி வீழ்ச்சியை நோக்கி வீணாவாய் சென்றுகொண்டிருந்தது. இந்நிலையில் அவன் பைத்தியமாக காணப்பட்டான். அச்சமயம் தனது அருமை மனைவி ஆக்டேவியாவையும் (கிளாடியஸ் அரசனின் மகள்) தன்னுடைய வாரிசான பாப்பியாவையும் தனது தாயார் அக்ரிப்பினா Jr.யும் கொலைசெய்தான். தன்னை குறித்து பேசின செனட்டர்களுக்கு மரணதண்டனை அளித்தான். தனது மதிப்பிற்குரிய ஆசானான செனிகாவைத்தற்கொலை செய்து கொள்ள வற்புறுத்தினான். ரோம நகரம் தீப்பிடித்த போது (கி.பி.64-ல்) லயர் என்ற இசைக் கருவியை வாசித்து ( Fiddle பிடில் அல்ல, அப்போது பிடில் பழக்கத்தில் இல்லை) அவனின் கொடுங்கோலுக்கு உச்சக்கட்டமாக பற்பல துன்பங்களை கிறிஸ்தவர்களுக்கு வழங்கியும் அப்போஸ்தலனாகிய பேதுருவை அவர் கேட்டுக் கொண்டபடியே தலைகீழாக சிலுவையில் அறைய செய்தான். மரித்த பேதுருவின் தலை வெட்டப்பட்டது. அங்கிருந்தவர்கள் அவரின் தலையை கால்பந்தாக Foot Ball விளையாடி மகிழ்ந்தனர். இறுதியாக பவுலடியாரும் சிலுவையில் அறையப்பட்டார். அப்பொழுது செனட்சபை நீரோ கொலைகார குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டதை அறிந்த நீரோ தண்டனைக்கு பயந்து தனது 31-வயதில் 9-6-68 அன்று தற்கொலை செய்து கொண்டான். ரோம பேரரசு தன் செல்வாக்கை, சிறப்பை இழந்தது.

இவ்வாறாக கிறிஸ்தவர்களையும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர் களுக்கும் கிறிஸ்துமட்டுமின்றி கிறிஸ்தவர்களை துன்புருத்தினவர்களுக்கு இயேசு போதித்தபடியே நன்மைசெய்தும் அவர்களுக்காக ஜெபித்தும் வந்தனர், (மத்.5:44 அப்.16:25,27 ) வருகிறார்கள்.

தாங்கள் மரித்தாலும், அழிந்தாலும் தாங்கள் விசுவாசித்த இரட்சகர் இயேசுகிறிஸ்து நம்மிடையே ஜீவித்து வருகிறார். கிறிஸ்தவமும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. அதனை அகற்றவோ, அழிக்கவோ யாராலும் முடியவே முடியாது மட்டுமல்ல கிறிஸ்தவத்தை அழிக்க எண்ணியவர்கள், அழிந்துபோனார்கள். கிறிஸ்து ஒருவராய், உலக இரட்சகராய் தன்னை அனுப்பிய பரலோக பிதாவின் மகிமைக்காகவும், பரிசுத்த ஆவியானவரின் பேருதவியாலும் தனி மனிதனாய் ஆரம்பித்த இம்மார்க்கம் இன்று உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேலாக வளர்ந்துள்ளது. ஏனெனில் கிறிஸ்தவம் கிறிஸ்துவின் வார்த்தையின் மீது (தம் சரீரத்தின் மீது) கட்டப்பட்ட ஜீவனுள்ள

புதிதான மார்க்கமாகும் (எபி.10:19-22) சத்தியத்தை அறியாத, விசுவாசிக்காத, கீழ்ப்படியாதவர்களையும் நாம் உற்சாகப்படுத்திடுவோமா? முயற்சிப்போம் வெற்றிபெறுவோம்.

பேதுரு இயேசுவை எருசலேமுக்குச்சென்று பாடுபடவேண்டாம் என்று அவருக்கு ஆலோசனை கூறினான் மத்.16:21-22 அவனோ பிற்பாடு மக்களுக்கு அறிவுரை கூறும்போது "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்றான் 1பேது4:16. பவுலை இரட்சகர் தெரிந்துகொண்டபோது, கிறிஸ்தவர்களை பல பாடுபடுத்திய பவுலடியார் எவ்வளவு மேன்மையான ஊழியக்காரனாக இருந்தாலும் இரட்சகர் பவுலை குறிப்பிடும்போது "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபட வேண்டும் மென்பதை அவனுக்குக் காண்பிப்பேன் என்றார் எனவே கிறிஸ்தவம் பாடுகளின் மத்தியிலேதானே வளர்ந்து வருகிறது அப்.9:16.


கிறிஸ்தவர்களை பாடுபடுத்தி சிலுவையில் கொன்ற நீரோ, தேவனை அறிந்து கொள்ள விரும்பாத உலக ஞானிகளுக்கு என்ன கிடைக்கும் என்பதை நாம் எச்சரிக்கையாக எண்ணி இயேசுவுக்காகவே வாழ்வோம்.கிறிஸ்து நமக்கு ஜீவனாகவும், சாவு நமக்கு (இலாபமாகவும்) ஆதாயமுமாகவும் ஆகட்டும்!

"நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக்கா22:32). நாம் நம் சகோதரரை ஸ்திரப்படுத்துவோம்!


**மேட்டுப்பாளையம் கிறிஸ்துவின் சபையார்**
**நடத்தும் சுவிசேஷக்கூட்டத்திற்கு**
**உங்களை அன்புடன் அழைக்கிறோம்**

**செய்தி: சகோ. ஜான் எஸ்.நாதன் - சென்னை**

**இடம்:**
**கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
**பிரிச் இல்லம் 2/30 F கே.பி.சதுக்கம், வி.பி.நகர்**



**காரமடை - 641 104**
**மேட்டுப்பாளையம்**
**கோவை மாவட்டம்**
**நாள்:**
**27.3.2009 வெள்ளி கிழமை**
**நேரம்:**
**மாலை 6.00 மணி**

***Please Contact***
*K.P.Thangaraj,Pr.,*
*P.O.BoX.54*
*Mettupalayam -*
*641 301,*
*COIMBATORE*
*DT. Mbile:93446*
*50084*

வழிதடம்: மேட்டுப்பாளையம் - கோவை மெயின்ரோட்டில் ஆசிரியர் காலனி ஸ்டாப்

# இது சம்பாத்திய காலமா?

சிறுவர் பகுதி



**வேத வாசிப்பு: 2இராஜாக்கள்5:20-27**

*Bro. K.MOHAN*
*281/ Opp Power Office,*
*B.Komarapalayam -638 183*
*Mobile No: 93642 02750*

தேவப்பிள்ளைகள் யாவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வேதத்தில் அநேக அற்புதங்களை பார்த்து வந்தோம். இன்று எச்சரிப்பான சில காரியங்களைக் குறித்துப் பார்ப்போம். மேற்கண்ட வேத வசனப் பகுதியில் நாம் பார்க்கும்போது படைத்தலைவன் நாகமான் தீர்க்கதரிசி எலிசா மூலம் குஷ்டரோகம் நீங்கி சுத்தமாகிறான். இந்த சம்பவத்தை குறித்து அநேகர் போதித்திருப்பார்கள். நாம் இன்று பார்ப்பது எலிசாவின் ஊழியக்காரன் கேயாசியைப் பற்றி. சுத்தமான நாகமான் கெஞ்சிக் கூத்தாடியும் ஒரு காசு கூட வாங்க எலிசா விரும்பவில்லை. தேவ மனுஷனுக்கு பொற்குவியல்கள் மேன்மையாக தோன்றவில்லை. ஆனால், கேயாசியின் கண்கள் ஆசைப்பட்டன. நான் அவன் பிறகே ஓடி அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு மூச்சிரைக்க ஓடினான்.

அவனை கண்ட நாகமான் இரதத்திலிருந்து குதித்து சுகசெய்தியா என்று கேட்டான். அதற்கு கேயாசி ஒரு தாலந்து வெள்ளி இரண்டு மாற்று வஸ்திரம் என் எஜமான் கேட்டார் என்று பொய் சொல்லி, நாகமானிடம் பெற்றதை வீட்டிலே ரகசியமாக வாங்கி வைத்தான். எலிசா அவனைப் பார்த்து எங்கே இருந்து வந்தாய் என்றதற்கு எங்கும் போகவில்லை என்று மீண்டும் பொய் சொன்னான் அதற்கு எலிசா, நாகமான் இரதத்திலிருந்து திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரம், ஒலிவதோப்பு, திராட்சதோட்டம், ஆடு, மாடு வேலைக்காரர்களை வாங்குகிறதற்கும் இது காலமா? என்றார். உடனே கேயாசி குஷ்டரோகியானான். அன்பான தம்பி தங்காய், இன்றும் அநேகர் வயிற்றுக்காக, வசதிக்காக, வருமான நோக்கத்தோடு ஊழியம் செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் கேயாசியின் முடிவை மறந்துவிடக்கூடாது. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.

**மனப்பாட வசனம்**

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1தீமோத்தேயு6:10)

## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher's Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor's Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2009 Signature of Publisher.

## நடப்புச் செய்திகள்

- ☆ இங்கிலாந்தின் குனார்ட் லைனர் நிறுவனத்துக்கு சொந்தமான குயின் விக்டோரியா கப்பல் தன்னுடைய 2வது சுற்றுப்பணத்தை தொடங்கியுள்ளது.
- ★ மதுரை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் 500க்கும் மேற்பட்ட பயணிகளை கையாளும் வகையில் ரூ 129 கோடியில் புதிய டெர்மினல் அமைப்பதற்கான கட்டுமான பணி தீவிரமாக நடந்து வருகிறது.
- ★ இந்தியாவிலேயே முதல் முறையாக, விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ★ புவி வெப்பமடைவதே வெயில் உக்கிரத்திற்கு காரணம் என சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர் அருள் கூறியுள்ளார்.
- ★ அருந்ததியருக்கு 3% இட ஒதுக்கீடு பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# வேத அறிவுப் போட்டி
# எண். 103

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. யேகோவாநிசி என்று பலிபீடத்திற்கு பெயரிட்ட தீர்க்கன் யார்?
2. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்?
3. என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக் கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே எப்படிக் குடியிருப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
4. நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்ற அப்போஸ்தலன் யார்?
5. இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ என்ற தீர்க்கதரிசி யார்?
6. லௌகிக துக்கமோ என்னத்தை உண்டாக்குகிறது என்கிறார் பவுல்?
7. பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம், ஆனால் எதை இடலாகாது?
8. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் எவர்களாயிருக்கிறீர்களே என்று பவுல் எழுதுகிறார்?
9. கர்த்தரைச் சேவிக்கும்படி நீங்கள் அவரைத் தெரிந்துகொண்டதற்கு நீங்களே உங்களுக்குச் சாட்சிகள் என்றவன் யார்?
10. பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் எப்படி தேவனுக்கு ஒப்புரவாக்கினார்?

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" - ரோ.8:9

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Mar.2009.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு
புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Tuesday 6.30 - 6.45 a.m
IMAYAM TV - Every Thursday 6.15 - 6.30 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

அனைத்து
தொடர்புக்கும்

**Monthly Magazine**




**To**

*If undelivered please return to:*
**From**

**Editor**
**THE WORD OF CHRIST**
**P.O.Box-5**
**Batlagundu - 624 202**
**S.INDIA.**